[Sri N. Annamalai Pillai] [21st January 1961

ஒன்றும் செய்யமுடியாமல் நிர்க்கதியாகியிருக்கிறார்கள். இன்னொரு குடியானவனிடமிருந்து கடன் வாங்கியிருந்தால், இப்பொழுது அவன் காலைப் பிடித்துக் கொண்டு சலுகை பெற்றுக் கொள்ள முடியும். சர்க்கார் இவ்விஷயத்தைக் கவனிக்கவேண்டும். ஒரு வருஷப் பணத்தை மாத்திரம் வாங்கிக்கொள்ள வேண்டும். பாக்கிப் பணத்தை, 3 வருஷக்கடனாக இருந்தால் 6 வருஷத்திலும், 10 வருஷக்கடனாக இருந்தால் 13 வருஷத்திலும் வாங்கிக் கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். இப்பொழுது அதற்கு வட்டியை மாத்திரம் வாங்கிக்கொண்டால் சௌகரியமாக இருக்கும்.

கூட்டுறவு ஸ்தாபனம் மூலம் எருக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். கூட்டுறவு ஸ்தாபனம் நல்ல ஸ்தாபனம்தான். மூல புருஷர்களாகிய மாகாணத் தலைவர்கள், பாங்கு டைரக்டர்கள் ஆகியோர் நல்லவர்கள்தான். ஆனால், அவர்களுக்கு கீழே இருக்கிற குட்டி ஸ்தாபனங்கள் பெருச்சாளி மாதிரி வேலை செய்கின்றன. வருகிற மூட்டையை பெருச்சாளி அறிப்பது போல அறித்துத் தள்ளுகிறார்கள். பெருச்சாளி மண்ணை முன்னிருந்து பின்னே தள்ளுகிறது. அதுபோல மனிதனும் தனக்கு வேண்டியவர்களுக்கு எருவைக் கொடுக்கிறான். மற்றவர்கள் விரட்டியடிக்கப்படுகிறார்கள். இந்த மாதிரி ஆபாசமான நிலைமை ஏற்பட்டிருப்பதால், எரு சரியானபடி உபயோகப்படுவதில்லை. எரு சரியானபடி உபயோகப்படவேண்டுமானால், பாதியைக் கூட்டுறவு ஸ்தாபனத்திடம் கொடுங்கள், இன்னொரு பாதியை மற்றவர்களிடம் கொடுங்கள். மற்றவர்கள் பாதியாவது தேவையானவர்களுக்குக் கொடுப்பார்கள். ஆகையால் இம்மாதிரி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு பரோபகாரமாகும். எரு இல்லாமல் நல்வாழ்வு ஏற்படாது. 'எருவைத் தேடி ஏரைப் பிடி' என்று ஒரு பழமொழி உண்டு. எரு அவ்வளவு முக்கியமானது. ஆதலால் 50 அல்லது 25 சதவிகித எருவைக் கோவாப்பரேடிவ் ஸ்தாபனத்திடமும் பாக்கியைத் தனிப்பட்டவர்களிடமும் வினியோகம் செய்யக் கொடுத்தால் சௌகரியமாயிருக்குமென்று தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : The House will now adjourn and meet again at 3 p.m. on Monday, the 23rd January 1961.

The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

* 173. *Notification issued with G.O. Ms. No. 3950, Home, dated 2nd December 1960 directing that with effect from 1st January 1961 the Propaganda van MSZ 4533 belonging to the Dakshin Bharat Hindi Prachar Sabha (Tamilnad), Tiruchirappalli, be assessed tax at the rates specified under class 8 of Schedule II to the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931), so long as it is solely used for propagating Hindi.*

* 174. *Notification issued with G.O.* ***Ms.*** *No.* 3944, *Home. dated* 1st *December* 1960 *regarding exemption from the payment of the tax leviable under the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931), *the* 1960 *Willys Jeep Station Wagon MSX* 9113 *belonging to the Co-operative for American Relief everywhere, Inc., Madras so long as it is used for the purposes of the said Co-operative.*

---

* (Laid on the table of the House on 20th **January 1961.**